# மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 31 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2025 ல்**

**அசல் வழக்கு எண்.57/2017**

S.தாயம்மாள்,
க/பெ லேட் செவந்திலிங்கம்,
வடகபுத்தூர் வழி,
சோமரசம்பேட்டை,
ஸ்ரீரங்கம் தாலுக்கா,
திருச்சி மாவட்டம். ... மனுதாரர் /வாதி

/எதிர் /

1. கருவாயி,
   க/பெ லேட் திருப்பதி,
   சந்தைப்பட்டி,
   சந்தோஷ் நகர்,
   ஏர்போர்ட்,
   திருச்சிராப்பள்ளி.

2. S. பிரபு,
   த/பெ சிங்காரவேலன்,
   போலீஸ் குவாட்ரஸ்,
   எல் ஐ சி காலனி அருகில்,
   ராஜாராம்சாலை,
   கே.கே.நகர்,
   திருச்சிராப்பள்ளி. ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, கடந்த 16.07.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. சந்தானம் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு S.செல்வம்

அவர்களும் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. T.மணிமாறன் அவர்களும் முன்னிலையாகியும், 2ம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் எதிருரையை ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்தும், மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## <u>உத்தரவு</u>

1) மனுதாரர்/வாதி தரப்பில், இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் 151 வகுமுறை 16 விதி 1ன் கீழ் திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் சார்வு செய்து, அவரால் அங்கீகாரம் செய்யப்படும் அரசு அதிகாரியை வாதி தரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்க அனுமதியளிக்கக் கோரியும் அவர் மூலம் சர்வே எண் 265/3, தொகுப்பு வரிசை எண் வரிசை எண்.10/10/42ல் பட்டா எண்.322, கொட்டப்பட்டு திருச்சி தொடர்பாக கோவிந்தன், த/பெ திருப்பதி என்பவருக்கு வழங்கப்பட்ட நில உடைமை குறிப்பேடு தாக்கல் செய்யவும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த மனுதாரர்/வாதி அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கெதிராக பாகப்பிரிவினை

பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தின் 4 வது அயிட்ட சொத்தானது மனுதாரரின் தந்தைவழி மாமா கோவிந்தன் என்பவருக்குச் சொந்தமானது என்றும், அது செம்பட்டு கிராமத்தில் உள்ள கொட்டப்பட்டுவில் அமைந்துள்ளது என்றும், 4 வது அயிட்ட சொத்தினை கோவிந்தன் பெயருக்கு உறுதிப்படுத்தி உரிமை மற்றும் அனுபோகத்தை உறுதிப்படுத்தி 31.07.1974 அன்று வரிசை எண்.10/10/42 ல் பட்டா எண்.322 ஐ அரசாங்கம் வழங்கியுள்ளது என்றும், மேலும், மனுதாரரின் தந்தையின் சகோதரரான கோவிந்தன் திருமணமாகாமல் உயில் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றும், அதன்விளைவாக மனுதாரரின் தந்தை தனது சொத்தில் உரிமை பெற்றவராக மேற்படி சொத்தை அனுபவித்து வந்தார் என்றும், ஆனால் துரதிஷ்டவசமாக மனுதாரரின் சகோதரர் திருப்பதியின் மனைவியான அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி இந்த உண்மையை மறுத்து தனது எழுத்துப்பூர்வ அறிக்கையில் மேற்படி சொத்து திருப்பதிக்கு சொந்தமானது போல் ஒரு நிலைப்பாட்டை செய்துள்ளார் என்றும், கோவிந்தனுக்கு வழங்கப்பட்ட பட்டாவின் நகல் மனுதாரரிடம் உள்ளது என்றும், அதன் அசல் பட்டா மனுதாரரிடம் இல்லையென்றும், எனவே, மனுதாரரின் வாதங்களை உறுதிபடுத்தும் வகையில் வருவாய்த் துறையிடமிருந்து மேலே குறிப்பிட்ட பட்டாவைப் பெறுவதற்கு ஒரு மனுவை தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டதன்பேரில் மேற்படி பட்டாவைப் பெற வேண்டி பிரிவு 75 CRP ன் படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மாண்புமிகு நீதிமன்றம் மனுவை அனுமதித்து

மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிடப்பட்டதாகவும், மனுதாரரின் மகள் நிறைய முயற்சிகள் எடுத்தும், பலமுறை சென்று பார்த்தும், வருவாய்துறை இதுவரை பட்டா நகலை வழங்கவில்லையென்றும், மேற்படி ஆவணம் மனுதாரரின் வழக்கை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் அவசியமானது என்றும், எனவே, இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

3) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டவை தவிர மற்ற அனைத்தும் மறுக்கப்படுகின்றன என்றும், மனுவில் பத்தி 2ல் கூறப்பட்டுள்ள 4வது அயிட்ட சொத்து மனுதாரரின் தந்தைவழி மாமாவிற்குச் சொந்தமானது என்பதும், அது செம்பட்டு கிராமத்தில் உள்ள கொட்டப்பட்டுவில் அமைந்துள்ளது என்பதும், அவர் பெயருக்கு அரசு பட்டா எண். 322 வழங்கியதாகக் கூறியிருப்பதும், பொய்யானவை என்றும், உண்மையில் அரசு 07.07.1974 நாளிட்ட பட்டா எண்.386 ன்படி கோவிந்தன் (எ) ராம அம்பலக்காரரின் பெயரில்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதி கருவாயி அம்மாளின் கணவர் திருப்பதி என்றும், திருப்பதி இறப்பிற்குப் பின், 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தை பெற்று அனுபவித்து வந்துள்ளார் என்றும், திருப்பதி சொத்து தொடர்பான மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். மற்றும் பட்டா எண் சரியானதல்ல என்றும், இறந்துபோன திருப்பதியின் சொத்துக்கான தவறான சர்வே பட்டா எண்ணை

சமர்ப்பிக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

4) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிட்ட மேற்படி வாதத்தை 2ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

5) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6) இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இதன் அசல் வழக்கானது, தாவா சொத்தை 2 சம பாகங்களாகப் பிரித்து, அதில் 1/2 பாக உரிமையைப் பொறுத்து வாதிக்கு தனியாக பாகம் பிரித்து வழங்கிடவும், தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியோ அவரது ஆட்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து 1ம் பிரதிவாதியால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்கிற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இந்த அசல் வழக்கில் வாதி தரப்பில் 25.07.2023 அன்று வாதியை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக, 01.07.2025 அன்று போடப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் தங்களது தரப்பில் சர்வே எண் 265/3 , தொகுப்பு வரிசை

எண் வரிசை எண்.10/10/42ல் பட்டா எண்.322, கொட்டப்பட்டு திருச்சி என்ற ஆவணத்தை தாக்கல் செய்யக் கோரியும், அதுதொடர்பாக உரிய அரசு அதிகாரியை விசாரிக்கக் கோரியும் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் வழக்கின் தரப்பினர்கள் அவர்களது வழக்கை நிரூபிக்க உரிய வாய்ப்பு வழங்குவது நீதியின் நலன் கருதி அவசியமாகிறது. மேற்படி ஆவணத்தில் கண்ட பட்டா யார் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், சொத்தில் யாருக்கு உரிமை உள்ளது என்பதையும் வழக்கின் இறுதியில் தான் முடிவு செய்ய முடியும். மனுதாரர்/வாதி கோரியுள்ளது போல், அவர்கள் தரப்பை நிரூபணம் செய்ய, கூடுதல் ஆவணத்தை குறியீடு செய்ய சம்மந்தப்பட்ட அரசு அதிகாரியை அழைத்து விசாரணை செய்ய ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்யப்படுகிறது.

8) **முடிவாக,**

இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது,

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள, ஆவண காப்பக அலுவலர் அல்லது இதுதொடர்பாக உரிய அலுவலரால் அங்கீகாரம் வழங்கப்படும் அலுவலர், **சர்வே எண் 265/3, தொகுப்பு வரிசை எண் வரிசை எண்.10/10/42ல் பட்டா எண்.322, கொட்டப்பட்டு, திருச்சி** தொடர்பான ஆவணத்தின் சான்றிட்ட நகலுடன் இந்த நீதிமன்றத்தில் அடுத்த வாய்தாவில்

முன்னிலையாகி அதை தாக்கல் செய்து, தேவைப்படின் வாய்மொழி சாட்சியமளிக்க வேண்டுனெ உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.07.31 13:49:06 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.07.31 13:49:10 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**